**ஜனவரி – 07**

# TNPSC துளிகள்

- தமிழக மாநில அரசானது, ஃபெங்கல் புயலினை கடுமையான இயற்கைப் பேரிடராக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- தமிழக அரசானது, கோயம்பத்தூர், ஈரோட்டில் உள்ள சத்தியமங்கலம் மற்றும் நீலகிரியின் மிகவும் முக்கியப் பகுதிகளில் ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளால் (NSAID) உள்நாட்டுக் கழுகு இனத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது.
- ஒடிசா அரசானது, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) இழப்பீடு வழங்குவதற்கு ஏதுவாக டிசம்பர் மாதம் பெய்த பருவமழை சாராத மழைப் பொழிவினை இயற்கைப் பேரிடராக அறிவித்து உள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் NH-44 சாலையில் ரம்பன்-பனிஹால் பிரிவில் அமைந்துள்ள 2.35 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரும் உத்தி சார் ரீதியான பயன்பாடு மிக்க நான்கு வழிச் சாலையின் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- ஆஸ்திரேலிய அணியானது, இந்திய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகளை உள்ளடக்கிய கிரிக்கெட் டெஸ்ட் போட்டித் தொடரைக் கைப்பற்றியயதையடுத்து, பார்டர் கவாஸ்கர் கோப்பையினை 10 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் வென்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் பொதுப் பயன்பாட்டு மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள்





- தமிழ்நாட்டின் பொதுப் பயன்பாட்டு மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள் ஆனது, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் மாதம் வரையில் 8.77 மில்லியன் அலகு மின்சாரத்தினைப் பயன்படுத்தியுள்ளது.
- ஆனால் இந்த நுகர்வு ஆனது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில்

குறைவாகும்.

- வாகன மின்னேற்ற நிலையங்களில் மிக அதிகபட்சமாக 206.23 MU மின்சார நுகர்வுடன் டெல்லி முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (108.13 MU) மற்றும் குஜராத் (36.34 MU) ஆகியவை உள்ளன.
- சுமார் 40% மின்சார நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் நாட்டில் விற்கப்படும் 70% மின்சார இருசக்கர வாகனங்கள் நம் தமிழக மாநிலத்திலேயே தயாரிக்கப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாகனங்களின் மையமாக உள்ளது.
- சுமார் 5.05% பயன்பாட்டுப் பரவலுடன் 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மின்சார வாகன விற்பனையானது 92,978 அலகுகளாக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 5.58% பயன்பாட்டு விகிதத்துடன் மின்சார இரு சக்கர வாகனங்கள் ஆனது சுமார் 79,849 அலகுகள் விற்பனையாகி அதிக விற்பனையான வாகனங்களாக உள்ளன.

## தமிழ்நாடு அரசு விருதுகள் 2025




- 2025 ஆம் ஆண்டிற்கான அரசு விருதுகளைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.
- M. படிக்கராமு அய்யன் திருவள்ளுவர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் இருந்த தி.மு.க தலைவர் L. கணேசன் அண்ணா விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- கவிஞர் கபிலன், மகாகவி பாரதியார் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பொன். செல்வகணபதி பாரதிதாசன் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- மருத்துவ நிபுணரான G.R.இரவீந்திரநாத் தமிழ்த்தென்றல் திரு.வி.க விருதினைப் பெற உள்ளார்.
- வெ. மு. பொதியவெற்பன் KAP விஸ்வநாதம் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பெரியாரின் கருத்துக்களைப் பரப்பிய பத்திரிகையாளர் விடுதலை இராஜேந்திரன் தந்தை பெரியார் விருதினைப் பெற உள்ளார்.
- பாராளுமன்ற உறுப்பினரான ரவிக்குமார் அண்ணல் அம்பேத்கர் விருதினைப் பெற உள்ளார்.

- முத்து வவாசி 10 லட்சம் ரூபாய், தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் அடங்கிய கலைஞர் விருதைப் பெற உள்ளார்.

## சிந்து சமவெளி எழுத்து வடிவங்களைப் பொருள் கண்டுணர்தல்

- சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்து வடிவங்களைப் பொருள் கண்டுணர்வதில் வெற்றி பெறும் நிபுணர்கள் அல்லது அமைப்புகளுக்கு 1 மில்லியன் டாலர் பரிசு வழங்கப் படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- சிந்து சமவெளி பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு, புகழ் பெற்ற தொல்லியல் ஆய்வாளரும் பெரும் கல்வெட்டியல் அறிஞருமான ஐராவதம் மகாதேவன் அவர்களின் பெயரில் ஒரு இருக்கையினை அமைப்பதற்கு 2 கோடி ரூபாய் மானியத்தையும் அவர் அறிவித்துள்ளார்.
- தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையைப் பறைசாற்றும் வகையில் பணியாற்றி வரும் நாணயவியல் அறிஞர்கள் மற்றும் கல்வெட்டியல் அறிஞர்களைக் கௌரவிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் அரசு இரண்டு விருதுகளை வழங்க உள்ளது.
- தமிழ்நாட்டில் காணப்படும் 60% சுவரோவிய அடையாளங்கள், சிந்து முத்திரைகளில் காணப்படும் எழுத்துக்களுக்கு இணையாக/ஒன்றி இருந்தன.
- 90 சதவீதத்திற்கும் அதிகமான தென்னிந்தியாவின் சுவரோவியக் குறியீடுகளும் சிந்து சமவெளி நாகரிகத்தின் சுவரோவிய அடையாளங்களும் இணையாக இருந்தன.




# தேசியச் செய்திகள்


## VISTAAR திட்டம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, VISTAAR என்ற வேண்டி திட்டத்திற்காக (வேளாண் வளங்களை நன்கு அணுகுவதற்கான மெய்நிகர் வழியாக ஒருங்கிணைக்கப் பட்ட ஒரு அமைப்பு) வேண்டி வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்துடன் கை கோர்த்துள்ளது.
- VISTAAR என்பது வேளாண் தகவல் மற்றும் ஆலோசனை சேவைகளுக்கென மிகவும் பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பொதுப் பயன்பாடு சார்ந்த, பல்வேறு அமைப்புகளுக்கிடையேயான இயங்கு தன்மை கொண்ட மற்றும் கூட்டிணைவு வலை அமைப்பு ஆகும்.
- இது விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதையும், மிகவும் சிறந்த மற்றும் நிலையான வாழ்வாதாரத்திற்காக அவர்களின் வேளாண் நடைமுறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது விவசாயிகளுக்கு வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் புத்தொழில் சார்ந்த புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கான அணுகலை வழங்குகிறது.




## GEAC உறுப்பினர்களுக்கான புதிய விதிகள்





- மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவிற்கு (GEAC) தொழில்நுட்ப நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை மத்திய அரசு திருத்தியமைத்துள்ளது.
- இது 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் மரபணு ரீதியாக மாற்றப் பட்ட (GM) விதைகள் குறித்த ஒழுங்குமுறைகளுக்கான உயர் மட்டத் தொழில் நுட்ப அமைப்பாகும்.
- தற்போது இந்தப் புதிய விதிகளின் கீழ், ஒரு "நிபுணத்துவ உறுப்பினர்" அவர்களின்

கடமைகளுடன் முரண்படக்கூடிய "சொந்த தகவல்களை" வெளிப்படுத்த வேண்டும்.

- எந்தவொரு விருப்பம் சார் முரண்பாடும் GEAC குழுவின் எந்த முடிவையும் பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒரு நிபுணர் எடுக்க வேண்டும்.
- குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப் படும் ஒரு விவகாரத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்ட ஒரு நிபுணர் உறுப்பினர், அந்தக் கூட்டத்திற்கு முன்னதாக அது குறித்து வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்.

## இந்தியாவின் எண்ணிம உள்கட்டமைப்பு




- சமீபத்திய UDISE பிளஸ் அளித்த தகவலின் படி இந்தியாவில் 57.2% பள்ளிகளில் மட்டுமே செயல்பாட்டு நிலையில் உள்ள கணினிகள் உள்ளன, மேலும் அதில் 53.9% மட்டுமே இணைய அணுகலைக் கொண்டுள்ளன.
- 90% பள்ளிகளில் மின்சாரம் மற்றும் பாலினம் சார்ந்த தனிக் கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் உள்ளன.
- இருப்பினும், கைப்பிடிகளுடன் கூடிய சாய்வுவழிப் பாதைகள் (சுமார் 52.3% பள்ளிகளில் மட்டுமே உள்ளது), கணினிகள் மற்றும் இணைய அணுகல் போன்ற மேம்பட்ட வசதிகள் குறைவாகவே உள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 37 லட்சத்திலிருந்து 24.8 கோடியாக குறைந்ததையடுத்து, மாணாக்கர் சேர்க்கையில் பல மாற்றங்கள் பதிவாகி உள்ளது.
- மாணாக்கர் சேர்க்கைகளில் மாணவர்களின் பங்கு 51.9% மற்றும் மாணவிகளின் பங்கு 48.1% ஆகும்.
- மொத்தச் சேர்க்கை விகிதம் (GER) ஆனது கல்வி நிலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகிறது.
- துவக்கப் பள்ளி நிலைக் கல்வியானது 96.5% GER விகிதத்தினைக் கொண்டிருந்தாலும், அடிப்படைக் கல்வி நிலையில் இந்த விகிதம் வெறும் 41.5% ஆக உள்ளது.
- இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வி நிலைகளில் முறையே இந்த விகிதங்கள் 89.5% மற்றும் 66.5% ஆக உள்ளது.
- இடைநிலைப் பள்ளியில் சுமார் 5.2% முதல் மேல்நிலைப் பள்ளியில் 10.9% வரை என உயர் கல்வி நிலைகளிலும் இடை நிற்றல் விகிதம் கடுமையாக உயர்ந்து வருகிறது.

- தக்கவைப்பு விகிதங்களும் இதே போன்ற போக்கினையே கொண்டுள்ளன என்றாலும், துவக்கப் பள்ளி நிலையில் சுமார் 85.4% ஆக இருந்த இந்த விகிதமானது மேல்நிலைக் கல்வியில் வெறும் 45.6% ஆகக் குறைவாகவே உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## UN சுற்றுச்சூழல் உச்சி மாநாடுகள் 2024




- நான்கு முக்கிய உச்சிமாநாடுகள் பயன்மிகு விளைவுகளை வழங்கத் தவறிவிட்டதால், பல முக்கியமான சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள் கடந்த ஆண்டு பல தடைகளை எதிர்கொண்டன.
- இதில் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்து கொலம்பியாவிலும், பருவ காலநிலை குறித்து அஜர்பைஜானிலும், நிலத் தரமிழப்பு குறித்து சவுதி அரேபியாவிலும், நெகிழி குறித்து தென் கொரியாவிலும் நடைபெற்ற உச்சி மாநாடுகள் அடங்கும்.
- கொலம்பியா பல்லுயிர்ப்பெருக்க வளங்காப்பு பற்றிய பேச்சுவார்த்தைகள், மிகவும் நிலையான நிலப் பயன்பாட்டு நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பதற்கான நிதியளிப்பு வழிமுறைகளை நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தவறியதால் தடுமாறின.
- அஜர்பைஜானில், கடந்த ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை உச்சி மாநாட்டின் போது மேற்கொள்ளப் பட்ட முடிவான படிம எரிபொருட்களிலிருந்து மாறுவதற்கான உறுதிப்பாடுகளில் நாடுகள் தனித்தனியாகப் பிரிந்தன.
- சவூதி அரேபியாவில், தொழில்மயமான நாடுகள் சட்டப்பூர்வ வறட்சிநிலை குறித்த நெறிமுறையை நிறுவுவதில் ஆப்பிரிக்க நாடுகளுடன் மோதலில் ஈடுபட்டன.
- தென் கொரியாவில் நெகிழி மாசுபாடு குறித்த பேச்சுவார்த்தைகள், நாடுகளிடையே குறிப்பிடத் தக்க பிளவை ஏற்படுத்தின.

# பொருளாதாரச் செய்திகள்

## 2023 ஆம் ஆண்டு வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் திருத்தம்

- இந்திய வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகமானது (DGFT) 2023 ஆம் ஆண்டு வெளிநாட்டு


வர்த்தகக் கொள்கையில் திருத்தம் மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.

- வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் உருவாக்கம் அல்லது திருத்தம் தொடர்பான கருத்துகள், பரிந்துரைகள், கருத்துரைப்புகள் அல்லது அதற்கான பின்னூட்டங்களை ஏற்காததற்கான காரணங்களைத் தெரிவிக்கும் ஒரு முக்கிய நெறிமுறையையும் இந்த திருத்தங்கள் வழங்குகின்றன.
- பங்குதாரர்களிடமிருந்து பெறப்படும் ஒவ்வொரு மதிப்புமிக்க கருத்து/கருத்தும் உரிய முறையில் பரிசீலிக்கப்படுவதை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.
- இது கொள்கை மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் அல்லது மாற்றும் முன் முடிவெடுக்கும் செயல்பாட்டில் அனைத்துப் பங்குதாரர்களின் பங்கேற்பையும் நன்கு ஊக்குவிக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## கன கிலோமீட்டர் நியூட்ரினோ தொலைநோக்கி (KM3NeT)





- சமீபத்தில், அறிவியல் ஆய்வாளர்கள் உயர் ஆற்றல் கொண்ட நியூட்ரினோக்களைக் கண்டறிவதற்கு என மத்தியத் தரை கடலுக்கு அடியில் 2 தொலைநோக்கிகளை நிலை நிறுத்தியுள்ளனர்.

- இது பேரண்டத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தக் கூடிய பேய்த் துகள்கள் என்றும் அழைக்கப் படும் உயர் ஆற்றல் கொண்ட நியூட்ரினோக்களை ஆய்வு செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடலுக்கு மிகவும் அடியில் உள்ள இந்த நியூட்ரினோ தொலைநோக்கிகள் IceCube என்ற ஆய்வகத்தினை விட திறம் மிக்கதாக இருக்கும்.
- நியூட்ரினோக்கள் அவை வானியல் தூரத்தை இடையூறு ஏதும் இல்லாமல் பயணிக்கக் கூடிய, பலவீனமான தொடர்பு கொள்ளும், அணுக்களின் துணைநிலை துகள்களாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இமாச்சலப் பிரதேசத்தில் பல்லாஸ் பூனை

- காண்பதற்கு மிகவும் அரிய பல்லாஸ் பூனையின் முதல் புகைப்பட ஆதாரம் ஆனது இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில் கிடைத்துள்ளது.
- பல்லாஸ் பூனைகள், மத்திய ஆசியாவின் புல்வெளிகளை ஒரு முக்கிய வாழ்விடமாகக் கொண்ட சிறிய காட்டுப் பூனைப் பேரினமாகும்.
- 1776 ஆம் ஆண்டில் முதன்முதலில் இது குறித்து விவரித்த பீட்டர் சைமன் பல்லாஸ் என்ற ஜெர்மனி நாட்டினைச் சேர்ந்த ஒரு இயற்கை ஆர்வலரின் நினைவாக இதற்கு இப்பெயரிடப்பட்டது.
- இது பெரும்பாலும் தனியாகவும் இரவு நேரங்களிலும் நடமாடும் பூனை இனமாகும்.
- இது IUCN அமைப்பினால் ''அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம்' என வகைப் படுத்தப் பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## குஜராத் - இந்திய ஓநாய்களின் வாழ்விடங்களை பாதுகாப்பதற்கான வரைபடம்

- குஜராத் மாநில அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையானது, அந்த மாநிலத்தில் இந்திய ஓநாய்களின் எண்ணிக்கை 222 ஆக உள்ளதாக மதிப்பிட்டுள்ளது.
- சுமார் 80 என்ற எண்ணிக்கையுடன், பாவ்நகர் மாவட்டம் ஆனது குஜராத்தில் அதிக எண்ணிக்கையிலான ஓநாய்களைக் கொண்டுள்ளது.

- அதைத் தொடர்ந்து நர்மதா மாவட்டத்தில் 39, பனஸ்கந்தாவில் 36, சுரேந்திரநகரில் 18, ஜாம்நகர் மற்றும் மோர்பியில் தலா 12, கட்ச் மாவட்டத்தில் 9 என்ற அளவில் ஓநாய்கள் உள்ளன.
- அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் வேலவதாரில் உள்ள பிளாக்பக் (புல்வாய்) தேசியப் பூங்கா மற்றும் தோலேராவைச் சுற்றியுள்ளப் பகுதிகளை உள்ளடக்கிய பாவ் நகரில் உள்ள பால் பகுதியும் அடங்கும்.
- இந்த வரைபடமானது, அவற்றின் முக்கிய வாழ்விடங்களை இணைக்கும் முக்கியமான 'வழித்தடங்களை' அடையாளம் காண உதவும்.




## குஜராத்தின் முதல் கடலோரப் பறவைகள் கணக்கெடுப்பு





- குஜராத் மாநில அரசு ஆனது, ஜாம்நகரில் உள்ள கடல் சார் தேசியப் பூங்கா மற்றும் சரணாலயத்தில் நாட்டின் முதல் கடலோர மற்றும் கடல் பறவைகள் கணக்கெடுப்பை மேற்கொண்டது.
- குஜராத்தில் உள்ள கடல் சார் தேசியப் பூங்கா மற்றும் கடல் சார் சரணாலயம் ஆனது இந்தியாவின் முதல் பிரத்தியேக கடல் சார் தேசியப் பூங்கா ஆகும்.
- இது தேவபூமி துவாரகா, ஜாம்நகர் மற்றும் மோர்பி மாவட்டங்களில் பரவியுள்ளது என்ற நிலையில் இது சுமார் 170 கிலோ மீட்டர் நீளக் கடற்கரை மற்றும் ஓகா மற்றும் நவ்லாகி இடையே உள்ள 42 தீவுகளை உள்ளடக்கியது.

- கட்ச் வளைகுடாவில் உள்ள இப் பாதுகாக்கப்பட்ட பகுதியானது கடல்சார் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சதுப்புநில சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப் பட்டது.
- ஜாம்நகர் மாவட்டத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட கரையோர வாழ் பறவைகள் உட்பட 300 வகையான உள்நாட்டு மற்றும் வலசை போகும் பறவை இனங்கள் உள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஆக்னஸ் கெலேட்டி

- ஐந்து முறை ஒலிம்பிக் சாம்பியன் பட்டம் பெற்ற ஹங்கேரியா நாட்டினைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் (சீருடற்பயிற்சிகள்) வீராங்கனை ஆக்னஸ் கெலேட்டி (103) சமீபத்தில் காலமானார்.
- அவர் உலகின் மிக வயதான ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற நபர் ஆவார் மற்றும் இரண்டாம் உலகப் போரில் யூதர்களின் துன்புறுத்தல் முகாம்களில் இருந்து தப்பியவர் ஆவார்.
- 1956 ஆம் ஆண்டில், மெல்போர்னில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று, தங்கம் வென்ற மிக வயதான ஜிம்னாஸ்ட் வீராங்கனை என்ற பெருமையினைப் பெற்றார்.
- அவர் ஐந்து தங்கங்கள் உட்பட 10 ஒலிம்பிக் பதக்கங்களை வென்று, இதுவரை அதிகப் பதக்கங்கள் பெற்ற ஹங்கேரியத் தடகள வீராங்கனையாக இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.





# இதரச் செய்திகள்

## இந்திய இரயில்வே - விளையாட்டு விருதுகளை வென்றவர்களின் எண்ணிக்கை

- 2024 ஆம் ஆண்டில், அர்ஜுனா விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 32 வீரர்களில், ஐந்து பேர் இந்திய இரயில்வே நிறுவனத்தினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இந்த 5 அர்ஜுனா விருதுகளுடன், மொத்தம் 183 அர்ஜுனா விருதுகளையும், 28 பத்மஸ்ரீ,

12 தியான் சந்த், 13 துரோணாச்சார்யா மற்றும் 9 மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதுகளையும் இத்துறையினைச் சேர்ந்தவர்கள் பெற்றுள்ளனர்.

- இந்தியாவில் ஒரே நிறுவனத்திலிருந்து இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான விருது பெற்றவர்கள் பதிவாகியுள்ளது இரயில்வே துறையேயாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★